**செய்தி வெளியீடு எண்:270** **நாள் : 08.06.2016**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.

*******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் குறித்து இன்று (08.06.2016) தலைமைச் செயலக கூட்ட அரங்கத்தில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்காக சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மற்றும் அதனோடு தொடர்புடைய கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை, வருவாய்த் துறை, உணவு பொருள் வழங்கல் மற்றும் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகம், பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னத திட்டங்களான மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல், மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் ஆகிய திட்டப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மக்கள் நலத் திட்டப் பணிகளை முழுமையாக நிறைவேற்ற அனைத்து அலுவலர்களும் விரைந்து செயல்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி–110ன் கீழ் வெளியிட்டப்பட்ட அறிவிப்புகள், மானியக் கோரிக்கை அறிவிப்புகள் உள்ளிட்ட அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து அறிவிப்புகள் மீது தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளுமாறு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இவ்வாய்வுக் கூட்டத்தில், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முதன்மைச் செயலர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., அவர்கள், தகவல் தொழில் நுட்பத் துறை முதன்மைச் செயலர் திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள், வருவாய்த் துறை செயலர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை இயக்குநர் முனைவர் க. இராதாகிருஷ்ணன் அவர்கள், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் அவர்கள், உணவு பொருள் வழங்கல் மற்றும் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**